வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 14.05.2026 வியாழக்கிழமை இதழ் : 128 பக்கங்கள் : 08

# ஈழத் தமிழர் தங்களை தாங்களே ஆளும் உரிமையை உறுதி செய்க!

## தமிழக முதல்வரிடம் விடுதலை சிறுத்தைகள் கோரிக்கை

சென்னை, மே. 14

**ஈழத் தமிழர்கள் தம்மை தாமே ஆளும் உரிமையை தமிழக அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் என விடுதலை சிறுத்தைகள் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. தமிழக சட்டமன்றத்தில், தமிழக வெற்றிக் கழகத்தின் அரசாங்கம் தனது பெரும்பான்மையை காண்பிப்பதற்கான நம்பிக்கை வாக்கெடுப்பில் கலந்துகொண்ட விடுதலை சிறுத்தைகள் கட்சியின் உறுப்பினர் வன்னி அரசு இந்த கோரிக்கையை விடுத்தார்.**

இந்த நிலையில், தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கை ஏதிலிகளுக்கு இந்திய பிரஜாவுரிமையை பெற்றுக் கொடுக்க தமிழக அரசாங்கம் முழு முயற்சியையும் மேற்கொள்ள வேண்டும் என விடுதலை சிறுத்தைகள் கட்சியின் உறுப்பினர் வன்னி அரசு வலியுறுத்தினார்.

இதேவேளை, இலங்கை இந்திய கடற்றொழிலாளர்களின் பிரச்னைக்கு தீர்வை வழங்கவும் தமிழக அரசாங்கம் முன்னின்று செயற்பட வேண்டும் எனவும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் உறுப்பினர் வன்னி அரசு கோரிக்கை விடுத்தார். (அ)

# எதிர்க்கட்சியிலிருந்து விலகப்போவதில்லை!

## ஹர்ஷ டி சில்வா விளக்கம்



கொழும்பு, மே. 14

அரசாங்கத்தில் இணையப்போவதாகத் தன்னைப்பற்றி வெளியாகும் ஊகங்களை நிராகரித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, தாம் ஒருபோதும் எதிர்க்கட்சி முகாமிலிருந்து விலகப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளி யிட்டுள்ள நீண்ட அறிக்கையில், தமது குடும்பத்தைச் சேர்ந்த எவரும் அரசியலில் ஈடுபடவில்லை என்றும், இலங்கையை ஒரு வளர்ந்த நாடாக மாற்ற வேண்டும் என்ற உன்னத நோக்கத்திற்காகவே தாம் பொதுவாழ் வுக்கு வந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

குறுகிய அரசியல் இலாபங்களுக்காகத் தாம் ஒருபோதும் அரசியல் தீர்மானங்களை எடுப்பதில்லை என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

07

# அ.தி.மு.கவில் பெரும் பிளவு!

சென்னை, மே. 14

தமிழக சட்டமன்ற தேர்தல் தோல்வியைத் தொடர்ந்து, அ.தி.மு.கவில் ஏற்பட்டிருந்த உட்பூசல் தற்போது பாரிய பிளவாக வெடித்துள்ளது.

கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு எதிராகச் செயற்பட்ட முன்னாள் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட முக்கிய நிர்வாகிகள் பலர் கட்சியிலிருந்து அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர்.

நடந்து முடிந்த 2026 சட்டமன்றத் தேர்தலில் அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் சந்தித்த பின்னடைவைத் தொடர்ந்து, கட்சிக்குள்

07

# எரிபொருள் பயன்பாட்டை குறைப்பதே அரசின் இலக்கு

## ஜனாதிபதி அநுர கூறுகிறார்

கொழும்பு, மே. 14

எரிபொருள் பயன்பாட்டைக் குறைக்கும் நோக்கில் விலை அதிகரிப்பு உள்ளிட்ட சில கடினமான தீர்மானங்களை எடுக்க வேண்டியுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்ட விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க,

07

2.5 மில்லியன் டொலர் மோசடி

# பாதுகாப்பு நடவடிக்கைகளை கடுமையாக்கிய மத்திய வங்கி!

கொழும்பு, மே. 14

நிதி அமைச்சுக்கு சொந்தமான 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான மோசடிப் பரிமாற்றம் எனக் கூறப்படும் சம்பவம் மீண்டும் நிகழாமல் தடுக்கவும், அமைப்புகளை வலுப்படுத்தவும் இலங்கை மத்திய வங்கியும் நிதி அமைச்சும் இணைந்து செயல்பட்டு வருகின்றன என்று மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

மத்திய வங்கியில் நேற்று நடைபெற்ற ஊடக

07

# இரு நாட்டு மீனவர்களையும் அழைத்து தமிழக முதல்வர் பேச்சு நடத்தவேண்டும்

## இலங்கை மீனவர் கூட்டமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம், மே. 14

இந்திய-இலங்கை மீனவர்களின் பிரச்சினைக்கு முன்னாள் தமிழக முதலமைச்சர் பேனா எடுத்து கடிதம் எழுதுவது போல் தற்போதைய முதலமைச்சர் ஜோசப் விஜய்யும் கடிதம் எழுதுகிறார். இரண்டு நாட்டு மீனவர்களையும் அழைத்து தமிழக முதலமைச்சர் ஒரு பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும் என அகில இலங்கை மீனவ மற்றும் தொழிலாளர்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் என்.வி.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று அவரது

07

# “சட்டத்திற்கு மேல் எவரும் இல்லை” என்ற கூற்றை அரசாங்கம் நிரூபிக்க வேண்டும்!

## நாமல் ராஜபக்ஷ வலியுறுத்தல்



கொழும்பு, மே. 14

“சட்டத்திற்கு முன்னால் அனைவரும் சமம்” மற்றும் “சட்டத்திற்கு மேல் எவரும் இல்லை” என்ற ஜனாதிபதியின் கூற்று உண்மையானதாக இருந்தால், முறைகேடுகளுடன் தொடர்புடைய அனைவரும் பாரபட்சமின்றி விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான

07

# இன்று முதல் மழை குறையும்

யாழ்ப்பாணம், மே. 14

மத்திய வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு வடகிழக்கு திசையில் காணப்படும் நன்கமைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகள் உட்பட்ட இலங்கையின் பல பகுதிகளுக்கும் பரவலாக கிடைத்து வரும் மழை இன்று முதல் படிப்படியாக குறைவடையும் என எதிர்பார்க்கப் படுகிறது என யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்றைய தினமும் மேற்கு, வடமேற்கு, கிழக்கு, வடமத்திய, மத்திய மற்றும் வடக்கு

07

# 16 புதிய இதய சிகிச்சை ஆய்வகங்கள் நாடளாவிய ரீதியில் நிறுவ நடவடிக்கை

## 3.1 பில்லியன் ரூபா ஒதுக்கீடு

கொழும்பு, மே. 14

இலங்கையின் இதயச் சிகிச்சை சேவைகளை வலுப்படுத்தும் நோக்கில், 3.1 பில்லியன் ரூபா செலவில் இந்த ஆண்டு 16 புதிய இதயச் சிகிச்சை ஆய்வகங்களை அரச மருத்துவமனைகளில் நிறுவுவதற்குச் சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

சுகாதார மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவின் அறிவுறுத்தலின் பேரில் இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

07

# சட்டத்தின் ஆட்சி என்பது வெறும் மேடைப் பேச்சு!

## பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 14

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அரசாங்கத்தில் அரசியல் பலம் கொண்டவர்கள் அனைவரும் சட்டத்திற்கு மேலேயே இருப்பதாகவும், சட்டத்தின் ஆட்சி என்பது வெறும் மேடைப் பேச்சாக மட்டுமே சுருங்கிவிட்டது என்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான்ன தெரிவித்துள்ளார்.

07


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வடக்கு மீன்பிடி, விவசாயம், காணி உரிமை; ஆளுநரை சந்தித்து ஆராய்ந்த ஆஸி. தூதுவர்!

யாழ்ப்பாணம், மே. 14

வட மாகாணத்தின் விவசாயம், கடற்றொழில், காணி உரிமை மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவருக்கும் இடையிலான சந்திப்பின்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் மத்தியூ டக்வொர்த்துக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று புதன்கிழமை காலை கிளிநொச்சி, இயக்கச்சியில் அமைந்துள்ள "றீச்சா பார்க்" வளாகத்தில் இடம்பெற்றது.



இச்சந்திப்பில் வட மாகாணத்தின் சமகால நிலவரங்கள், விவசாய மற்றும் கடற்றொழில் துறைகளின் மேம்பாடு, நீண்டகாலமாகத் தீர்க்கப்படாதுள்ள காணிப் பிரச்னைகள் மற்றும் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் நிதிப் பங்களிப்புடன் முன்னெடுக்கப்படக்கூடிய எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

வட மாகாணத்தின் விவசாயத்துறையை நவீனமயப்படுத்துவது குறித்தும், குறிப்பாக விவசாயிகளின் உற்பத்திகளுக்கான பெறுமதி சேர்ப்பது தொடர்பிலும் இதன்போது அதிக கவனம் செலுத்தப்பட்டது. அத்துடன், விவசாய விளைபொருட்களைப் பதனிடும் நிலையங்களை வடக்கில் விரிவுபடுத்துவதன் அவசியத் தையும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

மேலும், கடற்றொழில் துறையில் கடலுணவுகள், கடல் பாசி மற்றும் கடல் அட்டை போன்றவற்றுக்கான பதனிடும் தொழிற்சாலைகளை நிறுவுவதன் மூலம், உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலையைப் பெற்றுக்கொடுக்க முடியும் எனவும் ஆளுநர் வலியுறுத்தினார். இதற்கமைவாக, விவசாய மற்றும் கடற்றொழில் உற்பத்திகளைக் கொள்வனவு செய்தல், பதனிடுதல் மற்றும் அவற்றிற்கான குளிர்சாதனக் களஞ்சிய வசதிகளை ஏற்படுத்துதல் ஆகியவற்றுக்காக தனியார் முதலீடுகளை வடக்கில் ஊக்குவிப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து அவுஸ்திரேலிய தூதுவர் கேட்டறிந்து கொண்டார்.


போர் நிறைவடைந்து பல ஆண்டுகளைக் கடந்த போதிலும், வடக்கில் இன்னமும் விடுவிக்கப்படாதுள்ள பொதுமக்களின் காணிகள் தொடர்பிலும் இச்சந்திப்பில் ஆராயப்பட்டது. குறிப்பாக, வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் ஆகியவற்றால் கையகப்படுத்தப்பட்ட காணிகளை விடுவிப்பதற்கான பொறிமுறைகளின் முன்னேற்றங்கள் குறித்துக் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. மேலும், இடம்பெயர்ந்த மக்கள் தமது காணி உறுதிகள் மற்றும் ஆவணங்களை இழந்தமையால் தற்போது எதிர்கொள்ளும் சட்டரீதியான சிக்கல்கள் குறித்தும் ஆளுநர் இதன்போது தெளிவுபடுத்தினார்.

இதன்போது, ஐக்கிய நாடுகள் சபையின் அனுசரணையுடன் காணிப் பிரச்னை தொடர்பான விவகாரங்களுக்குத் தீர்வு காண்பதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய செயற்றிட்டம் தொடர்பிலும் அவுஸ்திரேலிய தூதுவர் வினவி அறிந்துகொண்டார்.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் சுமார் 4 மில்லியன் டொலர் நிதியுதவியின் கீழ், உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகத் திறன்களை மேம்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் "வளர்ச்சிக்கான நிர்வாகம்" என்ற திட்டத்தின் ஊடாக, வட மாகாணத்துக்குத் தொடர்ச்சியான ஒத்துழைப்புகளை வழங்குவதாகவும் தூதுவர் இதன்போது குறிப்பிட்டார்.

அத்துடன், பொதுமக்களுக்குத் தேவையான அரச சேவைகளை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய "ஒற்றைச்சாளர்" முறையிலான சமூகப் பராமரிப்பு மையங்களை உருவாக்குதல் மற்றும் முதலீட்டாளர்களுக்கான சேவைகளை எளிமைப்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் இச்சந்திப்பில் ஆலோசிக்கப்பட்டது. (அ)

# மந்திகையிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி



யாழ்ப்பாணம், மே. 14

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தல் வாரத்தின் இரண்டாவது நாளான நேற்று வடமராட்சி மந்திகை சந்தை பகுதியில் இனப்படுகொலை நினைவேந்தல் நிகழ்வுகள் பருத்தித்துறை நகரசபை உறுப்பினர் ஜெயானந்தம் ஜெயகோபி தலைமையில் இடம்பெற்றன.

இதில் முதல் நிகழ்வாக முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை செய்யப்பட்ட மக்களுக்காக பொது ஈகச் சுடரினை மாவீரர்களின் சகோதரன் ராஜி ஏற்றிவைக்க, மலர் அஞ்சலியினை சோமஸ்கந்த குருக்கள் தனஞ்சய குருக்கள் ஆரம்பித்து வைத்தார். மக்களால் மெழுகு வர்த்தி ஏற்றப்பட்டு மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

தொடர்ந்து முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவாக உப்பு கஞ்சி வழங்கப்பட்டது.

இதில் ஜனநாயக போராளிகள் கட்சியின் பருத்தித்துறை நகர சபை உறுப்பினர் ஜெயானந்தம் ஜெயகோபி, ஜனநாயக போராளிகள் கட்சியின் உறுப்பினர்கள், மற அரசியல் பிரதிநிதிகள், வர்த்தகர்கள், பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

# குருநகரில் முள்ளிவாய்க்கால் கஞ்சி

யாழ்ப்பாணம், மே. 14

இறுதி யுத்தத்தில் குடித்து உயிர்வாழ்ந்த முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் குருநகரில் நேற்று காலை முன்னெடுக்கப்பட்டது.

மண்டைதீவு கடலில் 1986 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர்களின் நினைவுத் தூபியின் முன்பாக கஞ்சி காய்ச்சி வழங்கப்பட்டது.

உப்பில்லாது காய்ச்சிய கஞ்சி சிரட்டைகளில் பொது மக்களுக்கு வழங்கப்பட்டது.

இதன்போது குருநகர் பங்குத்தந்தை அருட்திரு றொக்ஸ் சவுந்தரா, பாடசாலை சிறுவர்கள், மீனவர்கள், பொதுமக்கள் பலரும் முள்ளிவாய்க்கால் கஞ்சியை குடித்து இறுதி யுத்த நினைவுகளை பகிர்ந்து கொண்டனர். (அ)

# 1.44 கிராம் ஹெரோயின் வைத்திருந்த குற்றவாளிக்கு 7 வருட கடூழியச் சிறை!

## யாழ். மேல் நீதிமன்றம் தீர்ப்பு

யாழ்ப்பாணம், மே. 14

தெல்லிப்பளை பகுதியில் கடந்த 2021 மார்ச் மாதம் 1.44 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டுச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு 7 வருட கடூழியச் சிறைத் தண்டனை மற்றும் 1 இலட்சம் ரூபா தண்டப்பணம் விதித்து யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா நேற்று தீர்ப்பளித்தார்.

மேலும்தண்டப்பணம்செலுத்த தவறும் பட்சத்தில் மேலும்12 மாத கால சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் அவர் உத்தர விட்டார்.

இது தொடர்பான வழக்கு விசாரணை நீண்டகாலமாக யாழ். மேல் நீதிமன்றில் நடைபெற்று வந்தது.

இவ்வழக்கில் வழக்கு தொடுநர் தரப்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் அரச சட்டவாதி கா. நசிகேதன் முன்னிலையாகியிருந்தார். (அ)

# யாழ். போதனா வைத்தியசாலை குறித்து அவநம்பிக்கை ஏற்படுத்தும் செய்திகள்!

## விழிப்புடன் இருக்கக் கோருகிறார் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், மே. 14

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தொடர்பில், மக்கள் மத்தியில் அவநம்பிக்கையை ஏற்படுத்தும் விதமாக சமூக ஊடகங்களில் செய்திகள் பரப்பப்பட்டு வருகிறது. எனவே முறையற்ற செய்திகள் தொடர்பில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

வைத்தியசாலையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற அனர்த்தம் தொடர்பில் வைத்தியசாலை நிர்வாகத்தினரால் இரண்டு குழுக்கள் அமைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முதலாவதாக வைத்தியசாலைக்கு வெளியே உள்ள அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டு, அது அனர்த்தம் தொடர்பிலான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இரண்டாவதாக வைத்தியசாலை மட்டத்தில் ஒரு குழு அமைக்கப்பட்டு, அக்குழு, அனர்த்தத்தில் இருந்து மீட்கப்பட்ட மருந்துகளை இருப்பு எடுக்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது. அதன் மூலம் தீயில் எரிந்த மருந்துகளின் பெறுமதிகள், களஞ்சியசாலை சேத விவரங்களை கணக்கிடும் பணிகளை ஆரம்பித்துள்ளது

அதேநேரம், அனர்த்தம் நடைபெற்ற இடம் யாழ்ப்பாண பொலிஸாரின் பொறுப்பில் உள்ளது. தடயவியல் விசாரணைகளை ஏற்கனவே அவர்கள் ஆரம்பித்துள்ள நிலையில், கடந்த திங்கட்கிழமை கொழும்பில் இருந்து வருகை தந்த அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்தினரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

விசாரணைகள் முடிவடைந்ததும் அதன் அறிக்கைகளை சுகாதார அமைச்சுக்கு, சம்பந்தப்பட்ட ஏனைய தரப்பினருக்கும் அனுப்பி வைப்போம்.

அத்துடன், நிரந்தர மருந்து களஞ்சியசாலையை அமைத்து தருமாறு, சுகாதார அமைச்சிடம் கோரியுள்ளோம்.

வைத்தியசாலையில் தற்போது சேவைகள் தடையின்றி நடைபெற்று வருகிறது. ஆனாலும் மருத்துவ சேவைகள் தொடர்பிலும், மருந்துகள் இல்லை என்றும் சமூக வலைத்தளங்களில் சிலர் முறையற்ற செய்திகளை பரப்பி மக்கள் மத்தியில் வைத்தியசாலை தொடர்பில் அவநம்பிக்கையை ஏற்படுத்துகின்றனர். எனவே மக்கள் அது தொடர்பில் விழிப்புடன் இருக்க வேண்டும் - என்றார். (அ)

# யாழில் ஹெரோயின் விழுங்கிய இளைஞன் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில்!

யாழ்ப்பாணம், மே. 14

யாழில் 10 கிராம் ஹெரோயினை விழுங்கிய 21 வயது இளைஞர் ஒருவர் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பெற்று வருகின் றார்.

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம்-கல்லவேம்படி பகுதியைச் சேர்ந்த குறித்த இளைஞரை வட்டுக்கோட்டை பொலிஸார் நேற்று முன்தினம் 2 கிராம் ஹெரோயினுடன் கைது செய்தனர்.

கைது செய்து அவரை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்று பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்திருந்தனர். இந்நிலையில் நேற்றுக் காலை அவருக்கு உடல் சுகயீனம் ஏற்பட்டது.

அதன் பின்னரே, பொலிஸார் தன்னைக் கைது செய்ய வரும் போது 10 கிராம் எடையுடைய ஹெரோயினை பொலுத்தீன் பையுடன் விழுங்கிய விடயத்தைக் கூறியுள்ளார்.

பின்னர் பொலிஸார் அவரை சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்துள்ளனர். குறித்த இளைஞருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-05)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
14.05.2026 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 31

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## ராஜபக்ஷாக்களின் மீட்சிக் கனவு

இலங்கையில் அரசியலில் ஆதிக்கம் செலுத்தியா உயர்வர்க்க குடும்பங்களில் மக்கள் கிளர்ச்சியினால் ஆட்சியில் இருந்து விரட்டப்பட்ட ஒரே குடும்பம் தங்களது குடும்பமே என்பதையும் நான்கு வருடங்களுக்கு முன்னர் இலங்கை வங்குரோத்து நிலையை அடைவதற்கு காரணம் மூன்று ராஜபக்ஷ சகோதரர்களும் அவர்களுடன் பணியாற்றிய உயர்மட்ட அதிகாரிகளுமே என்று நாட்டின் அதியுயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதையும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடிக்கடி மறந்து விடுகிறார் போலும்.

மீண்டும் தங்களது குடும்பத்துக்கு அரசியல் மீட்சி இருப்பதாக அவர் நம்புகிறார். இந்த வருடமே மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கான திட்டம் ஒன்று சிறீலங்கா பொதுஜன பெரமுனவிடம் இருப்பதாக சில வாரங்களுக்கு முன்னர் அவர் கூறியிருந்தார்.

போரில் விடுதலை புலிகளை தோற்கடித்தமைக்காக பெரும்பான்மைச் சமூகம் தங்களுக்கு என்றென்றைக்கும் கடமைப்பட்டிருக்கிறது என்பதுடன் தாங்கள் எதைச் செய்தாலும் அதை அந்தச் சமூகம் கேள்வியின்றி ஆதரிக்கும் என்ற எண்ணத்தையும் ராஜபக்ஷாக்கள் வளர்த்துக் கொண்டார்கள். வீதிகளில் இறங்கி கிளர்ச்சி செய்து மக்கள் தங்களை ஆட்சியில் இருந்து தூக்கியெறிவார்கள் என்று அவர்கள் கற்பனையிலும் நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்கள்.

தற்போது மீண்டும் தென்னிலங்கை மக்களை தங்களுக்கு சார்பாக அணிதிரட்டும் முயற்சிகளில் ராஜபக்ஷாக்கள் இறங்கியிருக்கிறார்கள். கடந்த வருடம் கொழும்பு நகரின் மத்தியில் உள்ள மிகவும் ஆடம்பரமான வாசஸ்தலத்தில் இருந்து வெளியேறவேண்டிய நிலை ஏற்பட்டபோது அங்கு கூடிய மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் "ஜெயவேவா" கோஷமெழுப்பினர்.

பல வருடங்களுக்கு முன்னர் சிறீலங்கன் ஏயார்லைன்ஸ/க்கு விமானங்களைக் கொள்வனவு செய்ததில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் தொடர்பாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு நடத்திவரும் விசாரணைகளில் வாக்குமூலம் அளிப்பதற்காக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மகிந்த ராஜபக்ஷ வருகை தந்தபோது குழுமிய நூற்றுக்கணக்கான ஆதரவாளர்கள் அங்கும் "ஜெயவேவா" கோஷமெழுப்பியதைக் காணக்கூடியதாக இருந்தது.

தங்களது ஆட்சிக் காலத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் படுமோசமான ஊழல் முறைகேடுகள் மற்றும் அதிகார துஷ்பிரயோகங்கள் தொடர்பான விசாரணைகளை அரசியல் ரீதியான பழிவாங்கல் என்று காண்பிப்பதில் ராஜபக்ஷாக்களும் அவர்களின் ஆதரவாளர்களும் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

மகிந்த ராஜபக்ஷவை விசாரணைகள் மூலம் அச்சுறுத்தி அவரது அரசியல் மீள் எழுச்சியை தடுத்துவிடலாம் என்று எவரும் கணக்குப்போட வேண்டாம் என்று பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவாசம் கூறியிருக்கின்ற அதேவேளை, மகிந்த மீது கைவைத்தால் அழிவு நிச்சயம் என்று அவரது ஊடகப் பேச்சாளரான மனோஜ் கமகே கூறியிருக்கிறார்.

"மே மாதம் என்பது பிரபாகரனின் கதையை முடித்த மாதமாகும். அதனால் தான் மகிந்த ராஜபக்ஷ மீதான விசாரணைக்கு இந்த மாதத்தை அரசாங்கம் குறிவைத்திருக்கிறது. பிரபாகரனின் ஆத்மாவை சாந்தியடைய வைக்க ஆளும் தரப்பு முயற்சிக்கிறது என்றும் கமகே இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அலுவலகம் முன்பாக கூடிநின்ற ஆதரவாளர்கள் மத்தியில் கூறினார்.

தங்களது ஆட்சிக் காலத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் பாரிய் ஊழல்களில் ஒன்றான விமானக் கொள்வனவு விவகாரம் தொடர்பான விசாரணைக்கு மகிந்த ராஜபக்ஷ வருகை தந்தபோது ஆதரவாளர்கள் தாங்களாக தன்னிச்சையாக வந்து கூடினார்களா அல்லது கூட்டிவரப்பட்டார்களா என்ற கேள்வி எழுகிறது.

ஆனால், சட்ட ரீதியான விசாரணைக்கு வரும்போது இவ்வாறான "அரசியல் நாடகத்தை" அரங்கேற்றுவதை ராஜபக்ஷ முன்னாள் அரச தலைவர் என்ற முறையில் தடுத்திருக்க வேண்டும். இந்த நாட்டில் சட்டத்தின் ஆட்சி ராஜபக்ஷாக்களின் ஆட்சியின்போதுதான் மோசமாகச் சீர்குலைந்திருந்தது என்பதை நினைத்துப் பார்க்கும்போது அவர்களிடம் கண்ணியமான செயற்பாடுகளை எதிர்பார்க்கவும் முடியாது எனறே தோன்றுகிறது.

# பொலிஸ் நிலையங்கள் சிலவற்றை மூடுவது குறித்து அரசு பரிசீலனை!

கொழும்பு, மே. 14

நாட்டில் தற்போது காணப்படும் பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை தேவைக்கு மிக அதிக மட்டத்தில் காணப்படுவதால், சிலவற்றை மூடுவது குறித்து அரசாங்கம் ஆலோசனை செய்வதாக பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேயபால தெரிவித்தார்.

குருநாகல் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

நாட்டில் பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளதுடன், போயவலான பொலிஸ் நிலையம் போன்ற இயற்கை அனர்த்தங்களினால் சேதமடைந்த நிலையங்களுக்கு பதிலாக புதிய இடங்களை தேடுவதை விட, தற்போதைய சூழலில் தேவையற்ற ரீதியில் இயங்கி கொண்டிருக்கும் சில பொலிஸ் நிலையங்களை மூடுவது குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

தேவையற்ற நிலையில் இயங்கும் நிலையங்களை மூடுவதன் மூலம் நிர்வாகச் செலவுகளைக் குறைத்து வளங்களை மிகவும் தேவையான இடங்களுக்கு பகிர்ந்தளிப்பதன் மூலம் பொலிஸ் சேவையை மிகவும் வினைத்திறனான முறையில் முன்னெடுப்பதற்கான மீளாய்வு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இந்தத் தீர்மானம் அமையவுள்ளது-என்றார். (அ)

# தொழிநுட்பக் கோளாறு காரணமாக அஸ்வெசும கொடுப்பனவில் சிக்கல்

கொழும்பு, மே. 14

சித்திரை புத்தாண்டுக்கான விசேட நிவாரணக் கொடுப்பனவை விநியோகிக்கும்போது ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, சுமார் 50,000 அஸ்வெசும பயனாளிகளுக்கு இரு முறை கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளதை நலன்புரி நன்மைகள் சபை உறுதிப்படுத்தியுள்ளது.

இதன் மூலம் மேலதிகமாக வழங்கப்பட்ட 248.8 மில்லியன் ரூபாவை, மே மாதக் கொடுப்பனவுகளில் இருந்து கழிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

நேற்று முன் தினம் சபை வெளியிட்ட அறிக்கையில்,

1.7 மில்லியன் பயனாளிக் குடும்பங்களுக்கான நிவாரணக் கொடுப்பனவுகளை "ஒருங்கிணைந்த நலன்புரி நன்மைகள் தகவல் அமைப்புக்கு" வெளியே கைமுறையாக முன்னெடுத்தபோது, ஒரு கோப்பு தவறுதலாக இரு முறை இலங்கை வங்கிக்கு பதிவேற்றப்பட்டதால் இந்தத் தவறு நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாதத்திற்கான வழக்கமான அஸ்வெசும கொடுப்பனவுகள் ஏப்ரல் 10 ஆம் திகதிக்குள் வெற்றிகரமாக வழங்கி முடிக்கப்பட்டன.

மத்திய கிழக்கு மோதல்களால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைக் கருத்திற்கொண்டு, ஜனாதிபதியினால் பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்ட விசேட புத்தாண்டு நிவாரணத்தின் கீழ் பின்வரும் தொகைகள் ஒதுக்கப்பட்டன.

இதனடிப்படையில், மிகவும் ஏழ்மையான குடும்பங்களுக்கு 7,500 ரூபா, ஏழ்மையான குடும்பங்களுக்கு 5,000 ரூபா, பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களுக்கு 2,500 ரூபாவினை மேலதிகமாக வழங்க அரசு தீர்மானித்திருந்த நிலையில்,

தற்போதுள்ள "ஒருங்கிணைந்த நலன்புரி நன்மைகள் தகவல் அமைப்பிற்கு" தகவல் அமைப்பினால் ஒரே மாதத்தில் இரண்டு வெவ்வேறு கொடுப்பனவுகளைச் செயல்படுத்த முடியாது. இதனால், புத்தாண்டுக்கு முன்னர் பணத்தை வழங்க வேண்டும் என்ற நோக்கில், தகவல் தொழில்நுட்பம் மற்றும் நிதிப் பிரிவுகள் இணைந்து கைமுறையாகக் கோப்புகளைத் தயாரித்தன.

இதன்போது, ஒரு கோப்பு தவறுதலாக இருமுறை பதிவேற்றப்பட்டதால், ஏழ்மையான பிரிவைச் சேர்ந்த 49,759 பயனாளிகளுக்கு இருமுறை பணம் கிடைத்துள்ளது.

இந்தத் தவறு கண்டறியப்பட்டதும், மேலதிகக் கொடுப்பனவுகளை முடக்க சபை நடவடிக்கை எடுத்தது. இருப்பினும், பயனாளிகள் ஏற்கனவே அந்தப் பணத்தை வங்கிகளில் இருந்து பெற்றுவிட்டனர். இதன் விளைவாக, மேலதிகமாகச் சென்றடைந்த 248.8 மில்லியன் ரூபா, அந்தப் பயனாளிகளின் மே மாதக் கொடுப்பனவில் இருந்து மீளப் பெறப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சீரற்ற காலநிலை மீனவர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, மே. 14

நாட்டின் வடகிழக்கு திசையில் நிலவும் குறைந்த அழுத்தப் பிரதேசம் காரணமாக, கடலோரக் கடல் பகுதிகளில் காலநிலை சீரற்றதாகக் காணப்படலாம் என்பதால், கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும்போது மீனவர்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறும், அனைத்து மீனவர்களும் உயிர் காப்பு அங்கிகளை அணிவது கட்டாயமெனவும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த வலியுறுத்தியுள்ளார்.

நேற்றுக் காலை வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையின் படி, நாட்டைச் சூழவுள்ள கடல் பகுதிகளில் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

அத்துடன் காற்றின் வேகம் மணிக்கு 25-35 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடும். குறிப்பாக புத்தளம், சிலாபம் முதல் காலி, மாத்தறை ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடல் பகுதிகள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படலாம் என பணிப்பாளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.

இது குறித்து மேலும் கருத்துத் தெரிவித்த பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த-

தற்போதைய நிலவரப்படி கடற்றொழில் நடவடிக்கைகளுக்கு நாம் முழுமையான தடையை விதிக்கவில்லை. இருப்பினும், கடலோரப் பகுதிகளில் சிறு படகுகள் மூலம் மீன்பிடியில் ஈடுபடுவோர் வானிலை அறிக்கைகள் குறித்துத் தொடர்ச்சியான அவதானத்துடன் இருக்க வேண்டும்.

கடல் கொந்தளிப்பாகக் காணப்பட்டால், உடனடியாகப் பாதுகாப்பாகக் கரை திரும்புமாறோ அல்லது கடலுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறோ கேட்டுக் கொள்கிறோம். குறிப்பாக, கடலுக்குப் புறப்படுவது முதல், மீன்பிடியில் ஈடுபடும் நேரம் மற்றும் மீண்டும் பாதுகாப்பாகக் கரை திரும்பும் வரை முழுமையான காலப் பகுதியிலும் உயிர் காப்பு அங்கிகளை அணிந்திருப்பது கட்டாயமாகும். எனினும், பலநாள் மீன்பிடிக் கலன்கள் வழமை போன்று துறைமுகங்களிலிருந்து வெளியேறவும் கரை திரும்பவும் முடியும் - என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
எளிதாக முடிய வேண்டிய விஷயங்கள் கூட பல முறை போராடி முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். சாதிக்கும் நாள்.

**இடபம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். உறவினர் நண்பர்களால் அனுகூலம் உண்டு. வெளிவட்டாரத் தில் அந்தஸ்து உயரும். திறமை வெளிப்படும். மதிப்புக் கூடும்.

**மிதுனம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் முடிவுகள் எடுப்பீர்கள். சாதிக்கும் நாள்.

**கடகம்**
இதுவரை இருந்த அலைச்சல் நீங்கும். குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். பணப் புழக்கம் கணிசமாக உயரும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மாற்றம் ஏற்படும் நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிக்கப் பாருங்கள். உத்தியோகத்தில் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

**கன்னி**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**துலாம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**விருட்சிகம்**
புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உத்தியோகம் உயர் கல்வி பற்றி யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். சிந்தனை திறன் வெளிப்படும் நாள்

**தனுசு**
பழைய பிரச்சினைகளுக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

**மகரம்**
கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். உடன் பிறந்தவர்களால் பயனடைவீர்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

**கும்பம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்- மனைவிக்குள் இருந்து வந்த பிரச்சினைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளிடம் மதிப்பு அதிகரிக்கும். நல்லன நடக்கும் நாள்.

**மீனம்**
ராசிக்கு சந்திரன் இருப்பதாலும் ஓய்வின்றி உழைக்க வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் மறைமுக நெருக் கடிகள் வந்து நீங்கும். நேர் மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

# அஸ்வெசும நலன்புரி திட்டத்திலிருந்து ஒரு இலட்சம் குடும்பங்கள் வெளியேறும்

கொழும்பு, மே. 14

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற்று வரும் பயனாளிகளில் சுமார் ஒரு இலட்சம் குடும்பங்கள், மாற்று வாழ்வாதாரத் திட்டங்கள் மூலம் நிலையான வருமானத்தைப் பெற்றுள்ளதை அடுத்து, அத் திட்டத்திலிருந்து வெளியேறத் தயாராகி வருகின்றன என கிராமிய அபிவிருத்தி,

சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இதற்கமைய வரும் 2027 முதல் 2029 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள், தம்மால் இயன்றளவு அதிகளவிலான குடும்பங்களை இந்த நலன்புரித் திட்டத்திலிருந்து படிப்படியாக வெளியேற்றுவதற்கு அரசாங்கம் இலக்கு நிர்ணயித்துள்ளது. ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ, சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையின்படி அஸ்வெசும கொடுப்பனவுகளை நிறுத்துவதற்கான குறிப்பிட்ட காலக்கெடு இருந்தாலும், பல பயனாளிகளின் வருமான மட்டம் இன்னும் போதியளவு அதிகரிக்கவில்லை எனத் தெரிவித்தார்.

கடந்த 2025 ஆம் ஆண்டு மே மாதம் சமர்ப்பிக்கப்பட்ட வரவு -செலவுத் திட்டத்தின் ஊடாக, தற்போதைய அரசாங்கம் இத்திட்டத்தில் பல்வேறு சீர்திருத்தங்களை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன்படி சுயதொழில் வாய்ப்புகள், நிதியுதவிகள், சிறு அளவிலான கோழிப்பண்ணை அமைத்தல், ஜப்பானிய மொழிப் பயிற்சி மூலம் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு வழிகாட்டுதல் போன்ற மாற்றுத் திட்டங்கள் ஊடாக ஒரு இலட்சம் குடும்பங்கள் இதுவரை கணிசமான வருமானத்தைப் பெற்றுள்ளன. 2023 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த அஸ்வெசும திட்டத்தின் கீழ், தகுதியற்ற சில குடும்பங்கள் உள்வாங்கப்பட்டுள்ளதாகவும், தகுதியுடைய ஏழைக் குடும்பங்கள் சில புறக்கணிக்கப்பட் டுள்ளதாகவும் பொதுமக்கள் மத்தியில் தொடர்ந்தும் விமர்சனங்கள் நிலவி வருகின்றன. அத்துடன், வழங்கப்படும் கொடுப்பனவுகள் குடும்பத் தேவைகளுக்கோ அல்லது வருமானம் ஈட்டும் வழிகளுக்கோ பயன்படுத்தப்படாமல், தேவையற்ற நுகர்வுகளுக்குச் செலவிடப்படுவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறித்தும் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளதாக பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ மேலும் தெரிவித்தார். (அ)

# விரும்பி ஓய்வு பெற தீர்மானித்த மின்சார சபை ஊழியர்களுக்கான இழப்பீட்டு தொகை விரைவில்!

கொழும்பு, மே.14

இலங்கை மின்சார சபை மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் விருப்ப ஓய்வுபெற தீர்மானித்த ஊழியர்களுக்கான இழப்பீட்டுத் தொகையை, இன்னும் சில தினங்களுக்குள் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான இறுதிக் கட்ட ஏற்பாடுகள் மற்றும் எழுந்துள்ள சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்கான உயர்மட்டக் கலந்துரையாடல் ஒன்று, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் அனுர கருணாதிலக்க தலைமையில் கடந்த திங்கட்கிழமை அமைச்சில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் போது, இழப்பீடு வழங்கும் பணிகளில் ஏற்பட்டுள்ள தாமதங்களைத் தவிர்த்து, எவ்வித தடையுமின்றி கொடுப்பனவுகளை விரைவாக வழங்குவதற்கான ஆலோசனைகளையும் தீர்வுகளையும் அமைச்சர் அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளார்.

மின்சாரத்துறையின் செயல்திறனை மேம்படுத்துவதற்கும், அதன் செயற்பாடுகளை முறைப்படுத்துவதற்கும் அரசாங்கம் மேற்கொண்டு வரும் பரந்த மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் ஒரு அங்கமாகவே இந்த விருப்ப ஓய்வுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த விசேட சந்திப்பில் மின்சக்தி அமைச்சின் பிரதி அமைச்சர், அமைச்சின் செயலாளர், சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் மின்சாரத் துறை சார்ந்த முக்கிய நிறுவனங்களின் தலைவர்கள் உள்ளிட்ட உயர் மட்டப் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த இழப்பீட்டு விநியோகம், விருப்ப ஓய்வு பெற்ற ஊழியர்களுக்குப் பெரும் நிவாரணமாக அமைவதுடன், மின்சாரத் துறை சீர்திருத்தங்களை சீரான முறையில் முன்னோக்கி நகர்த்த உதவும் என மின்சக்தி அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

# ஹேமரத்ன தேரரை விளக்கமறியலில் வைக்க அநுராதபுரம் நீதவான் மறுப்பு

கொழும்பு, மே. 14

அட்டமஸ்தானாதிபதி வணக்கத்துக்குரிய பல்லேகம ஹேமரத்ன தேரரை மீண்டும் விளக்கமறியலில் வைப்பதற்கான உத்தரவைப் பிறப்பிக்க அநுராதபுரம் பிரதம நீதவான் சியபத் சசிது விக்ரமரத்ன நேற்று முன் தினம் மறுப்பு தெரிவித்துள்ளார்.

கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தின் எட்டாம் இலக்க நீதவானால் பிறப்பிக்கப்பட்ட விளக்கமறியல் உத்தரவு அல்லது சந்தேக நபரை அநுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு விடுக்கப்பட்ட கட்டளை ஆகியவற்றின் உத்தியோகபூர்வ பிரதிகள் எதுவும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை என நீதவான் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த சட்ட ஆவணங்கள் இல்லாத பின்னணியிலும், சந்தேக நபர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படாத நிலையிலும், அவரை மேலும் விளக்கமறியலில் வைப்பதற்கு தமக்கு சட்டபூர்வ அதிகாரம் இல்லை என நீதவான் விளக்கமளித்துள்ளார்.

அத்துடன், வெலிக்கடை விளக்கமறியல் சிறைச்சாலையிலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட மருத்துவ அறிக்கையின்படி, தேரர் நீண்ட தூரம் பயணிப்பதற்கான உடல் தகைமையைக் கொண்டிருக்கவில்லை எனவும், அவருக்கு விசேட மருத்துவப் பரிசோதனைகள் தேவைப்படுவதால் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த முடியவில்லை எனவும் சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, சந்தேக நபரான தேரர் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி காலிங்க இந்திரதிஸ்ஸ, பதினைந்து வயது சிறுமியைத் துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை முற்றாக நிராகரித்ததுடன், சமூக வலைத்தளங்கள் ஊடாகவே இந்த விவகாரத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

நிட்டம்புவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நீதிமன்றத்தில் தெரிவிக்கையில், இச்சம்பவம் தொடர்பில் மேலும் பலரிடம் வாக்குமூலங்களைப் பெற வேண்டியுள்ளது-என்றார்.

இதற்கமைய, இந்த வழக்கின் விசாரணை மற்றும் புலனாய்வு முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ள அநுராதபுரம் பிரதம நீதவான், வழக்கை எதிர்வரும் மே மாதம் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார். (அ)

# ஆஸி. தூதுவர்-ரவிகரன் சந்திப்பு

முல்லைத்தீவு, மே. 14

இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவர் மெத்தியூ டக்வேரிற்கும் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரனுக்குமிடையில் நேற்று முன் தினம் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு - கள்ளப்பாடு வடக்கு பகுதியில் அமைந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரனின் மக்கள் தொடர்பகத்தில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இச்சந்திப்பில் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் உள்ளிட்ட வன்னிப்பிராந்தியத்தில் நிலவும் நில ஆக்கிரமிப்புக்கள், விவசாயிகள் மற்றும் மீனவ மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், மக்களின் வாழ்வாதார நிலமைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது முள்ளிவாய்க்கால் கஞ்சி தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன், அவுஸ்திரேலிய தூதுவருக்கு தெளிவுபடுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நீதித்துறைச் சுதந்திரத்தில் தலையிடுகிறார் ஜனாதிபதி

## கூட்டு எதிரணி பிரதம நீதியரசருக்கு கடிதம்

கொழும்பு, மே.14

நீதித்துறையின் சுதந்திரத்தில் ஜனாதிபதி தலையிடுவதாகக் குற்றம் சுமத்தி, அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கோரி கூட்டு எதிர்க்கட்சியினர் பிரதம நீதியரசருக்கு விசேட கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இது தொடர்பான விவரங்களை வெளியிட்ட கூட்டு எதிர்க்கட்சியின் அழைப்பாளரும் பேராசிரியருமான ஜீ. எல். பீரிஸ், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மகரகமையில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் உரையாற்றியபோது, நீதிமன்றில் நிலுவையிலுள்ள வழக்கு ஒன்றின் தீர்ப்பு குறித்து உத்தியோகபூர்வ அறிவிப்புக்கு முன்னரே கருத்து வெளியிட்டதாகக் குற்றம் சுமத்தினார்.

வழக்கு விசாரணை முடிவடைந்த பின்னர், தீர்ப்பு பாராளுமன்ற முறைமைக்கு அமைய எதிர்வரும் மே மாதம் 25 ஆம் திகதி வழங்கப்படும் என்றும், அதனைப் பாராட்டுவதற்குக் தயாராக இருக்குமாறும் ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டுள்ளதாகப் பேராசிரியர் பீரிஸ் சுட்டிக்காட்டினார்.

நீதிபதிக்கு மாத்திரம் தெரிந்த தீர்ப்பை மூன்றாம் தரப்பிற்கு வெளிப்படுத்துவது மற்றும் நீதித்துறைக்கு அழுத்தம் கொடுப் பது நீதிமன்ற அவமதிப்பாகக் கருதப்படுவதுடன், ஓராண்டு சிறைத் தண்டனை மற்றும் ஏழு ஆண்டுகள் குடியுரிமை பறிப்பு போன்ற தண்டனைகளுக்குரிய குற்றமாகும் என அவர் விவரித்தார்.

இதற்கமைய, பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேனவிற்கு அனுப்பப்பட்டுள்ள இந்த கூட்டு மகஜரின் பிரதிகள், சர்வதேச ரீதியிலான 12 க்கும் மேற்பட்ட தொழில்முறை அமைப்புகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அவர் உறுதிப்படுத்தினார்.

இந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட முன்னாள் அமைச்சர் வைத்திய கலாநிதி ராஜித சேனாரத்ன, ஜே. வி. பி. இன் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வாவின் கருத்துக்கள் ஜனநாயக நெறிமுறைகளை மீறுவதாகக் குற்றம் சுமத்தியதுடன், பாராளுமன்ற உறுப்பினர் தயாசிரி ஜயசேகர உயர்நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் நிலவும் நீதிபதி வெற்றிடங்களை நிரப்பாது ஜனாதிபதி நீதித்துறைக்கு அழுத்தம் கொடுப்பதாகக் குறிப்பிட்டார். (அ)

# சிறுவர் துஷ்பிரயோகங்கள் குறித்து குறைந்தளவிலேயே முறைப்பாடுகள்

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

கொழும்பு, மே. 14

சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளில் நீதியைப் பெற்றுக்கொள்வதற்கு சமூக மற்றும் கலாசார ரீதியிலான மனோபாவங்கள் பெரும் தடையாக இருக்கின்றன. அதனால் முறைப்பாடுகள் குறைந்த மட்டத்திலேயே முன்வைக்கப்படுகின்றன என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் மேல் நீதிமன்ற முன்னாள் நீதிபதி பிரீதி இனோகா ரணசிங்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் அட்டமஸ்தானத்தின் தேரர் மற்றும் நாவற்குழி விகாரையின் தேரர் ஆகியோருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுகளை அடுத்து கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அநுராதபுரம் சம்பவத்தில் சந்தேக நபரை கைது செய்வதில் நிலவிய இழுபறிகள் குறித்து பல தரப்பினரும் அதிருப்தி வெளியிட்டு வருகின்றனர். சுதந்திரப் பெண்கள் இயக்கம் போன்ற அமைப்புகள், இத்தகைய பாரதூரமான சம்பவங்களை கையாள்வதில் அரசாங்கம் போதிய அக்கறை காட்டவில்லையென குற்றம் சுமத்தியுள்ளதோடு, சட்டத்தை அமுல்படுத்துவதில் நிலவும் தாமதங்கள் குறித்தும் தமது கண்டனங்களைப் பதிவு செய்துள்ளன -என்றார். (அ)

# முதல் நான்கு மாதங்களில் மட்டும் 215,000 வாகனங்கள் இறக்குமதி!

கொழும்பு, மே.14

இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மட்டும் 215,000 இற்கும் அதிகமான வாகனங்கள் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த இறக்குமதிப் பொருள்களில் மோட்டார் சைக்கிள்களே அதிகளவைக் கொண்டுள்ளதாகவும், அவற்றின் மொத்த எண்ணிக்கை 144,000 இற்கும் அதிகம் எனவும் அந்தத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதே காலப்பகுதியில் 45000 இற்கும் அதிகமான கார்கள் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக உத்தியோகபூர்வ தரவுகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இந்த ஆண்டின் முதல் காலாண்டில் மாத்திரம் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களின் மொத்தப் பெறுமதி 195.95 பில்லியன் ரூபாவிற்கும் அதிகம் என இலங்கை மத்திய வங்கி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.(அ)

# கொழும்பில் கடும் மழை!

கொழும்பு, மே.14

கொழும்பில் அதிகபட்ச மழை பெய்வதால் கொட்டாஞ்சேனை, ஆமர்வீதி பகுதிகளில் நேற்று போக்குவரத்து முடங்கியது. பயணிகள் மாற்றுவழிகளை பயன்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை நேற்று காலை 6.00 மணியுடன் முடிவடைந்த கடந்த கடந்த 24 மணி நேரத்தில், பிலியந்தல கெஸ்பேவவில் அதிகபட்ச மழைப்பொழிவு பதிவாகியுள்ளது.

அப்பகுதியில் 204 மில்லிமீற்றர் மழை பெய்துள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அதேபோல், வெயங்கொட பகுதியில் 145.5 மில்லிமீற்றரும், கிலிமலே பகுதியில் 121 மில்லிமீற்றரும், வத்துப்பிட்டிவல பகுதியில் 105.5 மில்லிமீற்றரும் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

மேற்கு, சபரகமுவ, வடமேற்கு, வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும், திருகோணமலை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் கன மழை மற்றும் பலத்த மின்னல் ஏற்பட வாய்ப்புள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (அ)

# முதியோர் இல்லங்கள் குறித்து பொதுமக்களிடம் கருத்தறிவு

கொழும்பு, மே.14

நாட்டில் இயங்கிவரும் முதியோர் இல்லங்களை முறைப்படுத்துவதற்கும், அவற்றைக் கண்காணிப்பதற்கான விதிகளை வலுப்படுத்துவதற்கும் பொது மக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்ட கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளர் சம்பத் மந்திரிநாயக்க, புதிய முதியோர் இல்லங்களை அமைத்தல் மற்றும் அவற்றை நடத்திச் செல்வதற்கான அளவுகோல்களை மேம்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

பொதுமக்களிடமிருந்து திரட்டப்படும் ஆலோசனைகளை அடிப்படையாகக் கொண்டு, தற்போது நடைமுறையிலுள்ள விதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு பின்னர் புதிய சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

2000 ஆண்டின் ஆரம்பப் பகுதியில் முதியோர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டம் கொண்டுவரப்பட்டு, பின்னர் 2011 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும், பல வருடங்கள் கடந்துள்ள நிலையில் தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப அச்சட்டங்களை மறுசீரமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதற்கமைய, முதியோர் இல்லங்களை ஒழுங்குபடுத்துவது தொடர்பான திருத்தங்களை மேற்கொள்வதற்காக சட்ட வரைஞரிடம் அவசியமான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் சம்பத் மந்திரிநாயக்க மேலும் தெரிவித்தார்.(அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தமிழர்-முஸ்லிம்கள் ஒற்றுமைப்பட்டால்தான் எமது பிரச்னைகளுக்கு தீர்வு காண முடியும்!

## பாராளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லாஹ்

அம்பாறை, மே. 14

தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையுடன் வாழ வேண்டும். எங்களுக்கிடையில் எந்தவொரு பிரச்னைகள் இருந்தாலும் அவற்றை கலந்துரையாடலின் மூலம் தீர்த்துக்கொள்ள வேண்டும். நாம் ஒற்றுமையாக செயற்படுவதன் மூலமே எமது பிரச்னைகளுக்கு தீர்வு காண முடியும். அதுவே எமது வெற்றியாகும் என சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

காரமுனை முகைதீன் ஜும்ஆ பள்ளிவாசலில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அதிகாரிகள் இன ரீதியிலான முரண்பாடுகளை தவிர்த்து, இப்பிரதேச மக்கள் தங்களுடைய அதிகாரப் பொறுப்பிற்குட்பட்டவர்கள் என்ற அடிப்படையில் மக்களின் பிரச்னைகளை தீர்க்க முன்வரவேண்டும். அதேபோன்று மக்களும் உரிய மற்றும் நியாயமான முறையில் அதிகாரிகளை அணுகி தங்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயற்சிக்க வேண்டும். அதுவே பிரச்னைகளுக்கான நிலையான தீர்வை பெற்றுத்தரும்.



அதிகாரிகளுடன் முரண்பட்டு எமது பிரச்னைகளை தீர்க்க முடியாது என்பதை அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

அதேபோன்று அரசியல் தலைமைகளும் இவ்விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இன ரீதியான முரண்பாடுகளை உருவாக்கி எந்த பிரச்னைக்கும் தீர்வு காண முடியாது என்பதை புரிந்துகொள்ள வேண்டும்-என தெரிவித்தார்.

(அ)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கான போதைப்பொருள் விழிப்புணர்வு

மட்டக்களப்பு, மே. 14

இன்றைய சமூகத்தின் பெரும் சவாலாக உருவெடுத்துள்ள போதைப்பொருள் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தி, வருங்காலத் தலைமுறையினரை அதிலிருந்து பாதுகாக்கும் நோக்கில் சம்மாந்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு நேற்று சம்மாந்துறையில் நடைபெற்றது.

சமுர்த்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற இந்நிகழ்வு, பிரதேச செயலக போதைப்பொருள் தடுப்பு மற்றும் புனர்வாழ்வு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஜே.எம். இக்ராம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். முஹம்மது ஹனீபா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார். இதன்போது உரையாற்றிய அவர்,

போதைப்பொருள் எனும் அரக்கனைச் சமூகத்திலிருந்து வேரறுக்க வேண்டியதன் அவசியம் குறித்தும், குறிப்பாக மிக இளம் வயதிலேயே குழந்தைகளின் நற்பண்புகளை வளர்ப்பதில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இருக்கும் பொறுப்புகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

(அ)



# குரங்குகள் ஆக்கிரமிப்பால் திணறும் முருகன் ஆலயம்!

## பக்தர்கள் அச்சம், அவதி

அம்பாறை, மே. 14

கிழக்கின் தென்கோடியில் அமைந்துள்ள வரலாற்றுப் புகழ்மிக்க உகந்தமலை சிறீ முருகனாலயம் பகுதியில் மிதமிஞ்சிய குரங்குகளின் அதிகரித்த நடமாட்டம் காரணமாக பக்தர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஆலய வளாகம் மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளில் வழமைக்கு மாறாக மிதமிஞ்சிய அளவில் குரங்குகள் திரண்டு காணப்படுவதால், தினமும் வழிபாட்டுக்காக வருகை தரும் பக்தர்கள் அச்சத்துடனும் சிரமத்துடனும் தங்கள் வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக பக்தர்கள் கொண்டு வரும் பூஜைப் பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்களை குரங்குகள் பறித்துச் செல்லும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும், சிறுவர் மற்றும் முதியோர்களுக்கு இது பெரும் சிரமத்தை ஏற்படுத்துவதாகவும் பக்தர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

ஆலய பூசைக்காக மணி அடித்ததும் நூற்றுக்கணக்கான மந்தி மற்றும் சிறுவன் குரங்குகள் ஆலயத்தினுள் ஓடி வருகின்றன என்றும் பூசைத் தட்டுடன் வெளியே செல்ல முடியாத துர்ப்பாக்கிய நிலையும் தோன்றியுள்ளது என ஆலய வண்ணக்கர் சுதா கூறுகிறார்.

மேலும் ஆலய வளாகத்தில் வனப்புடன் நிழலாக காணப்படும் வேம்பு மரங்களின் துளிர்கள் மற்றும் இளம் கிளைகளை குரங்குகள் தொடர்ந்து உண்பதால், பல மரங்கள் உலர்ந்து பாதிக்கப்பட்டு வருகிறது.

இதுவரை 15 வேம்பு மரங்கள் பட்டுப் போயுள்ளன. அவற்றில் 10 மரங்களை ஆலய சம்பிரதாயம் கருதி பட்டமரங் கள் ஆலய வளாகத்தில் நிற்கக் கூடாது என்பதற்காக வனபரிபாலன இலாகா அனுமதியுடன் தறித்ததாக ஆலய வண்ணக்கர் சுதுநிலமே சுதா தெரிவித்தார்.

இதேவேளை எதிர்வரும் 19 ஆம் திகதி பாலஸ்தாபனம் நடைபெறவுள்ளது. தொடர்ந்து கதிர்காம பாத யாத்திரீகர்கள் வருகை தரவுள்ளனர்.

இந்நிலையில், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து தலையீடு செய்து குரங்குகளின் தொல்லைக்கு நிரந்தர தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் என பக்தர்கள் மற்றும் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ)

# திருமணச் சான்றிதழின் செல்லுபடித்தன்மை; நிர்வாக அதிகாரிகள் கேள்வி எழுப்பமுடியாது

## மேன்முறையீட்டு நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு

கொழும்பு, மே. 14

நிர்வாக நடைமுறைகளின் போது சமர்ப்பிக்கப்படும் திருமணச் சான்றிதழ் ஒன்றின் செல்லுபடியாகும் தன்மை அல்லது அதன் சட்டபூர்வ நிலை குறித்து கேள்வி எழுப்பவோ அல்லது தீர்மானிக்கவோ எந்தவொரு நிர்வாக அதிகாரிக்கும் அல்லது அரச நிறுவனத்துக்கும் அதிகாரம் கிடையாது என மேன்முறையீட்டு நீதிமன்றம் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பொன்றை வழங்கியுள்ளது.

அனுராதபுரம் - கலென்பிந்துனுவெவ பகுதியைச் சேர்ந்த அஷில ரணசிங்க என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட போதே நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

மனுதாரரின் தந்தை மற்றும் சிற்றன்னை வசம் இருந்த அரச காணி ஒன்றின் நீண்ட கால குத்தகை உரிமையைப் பெறுவதற்கு அவர் விண்ணப்பித்திருந்தார்.

எனினும், மனுதாரரின் தந்தை தனது முதல் மனைவியை முறையாக விவாகரத்து செய்த பின்னரே இரண்டாவது திருமணம் செய்து கொண்டாரா என்பது குறித்து கேள்வி எழுப்பிய அதிகாரிகள், இரண்டாவது திருமணம் செல்லுபடியாகாது எனக் கூறி மனுதாரரின் விண்ணப்பத்தை நிராகரித்தனர்.

நீதியரசர்களான தம்மிக கனேபொல மற்றும் ஆதித்ய படபெந்திகே ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் இந்த மனுவை விசாரணை செய்தது. இதன்போது நீதியரசர் ஆதித்ய படபெந்திகே பின்வரும் முக்கிய விடயங்களைச் சுட்டிக் காட்டினார்.

ஒரு திருமணத்தின் செல்லுபடியாகும் தன்மை, இல்லாமை அல்லது விவாகரத்து குறித்து தீர்மானிக்கும் அதிகாரம் குடும்ப நீதிமன்றங்களுக்கு (மாவட்ட நீதிமன்றம்) மாத்திரமே உரியது.

திருமணப் பதிவு கட்டளைச் சட்டத்தின் 52 ஆவது பிரிவின் படி, ஒரு திருமணச் சான்றிதழ் என்பது அந்தத் திருமணம் சட்டபூர்வமாக இடம்பெற்றதற்கான முதனிலைச் சான்றாகும்.

ஒரு நீதிமன்றத்தின் தீர்ப்பு அல்லது அறிவித்தல் இல்லாத நிலையில், ஒரு திருமணச் சான்றிதழைப் போலியானது என்றோ அல்லது செல்லுபடியற்றது என்றோ தீர்மானிக்க நிர்வாக அதிகாரிகளுக்கு எவ்வித சட்டபூர்வ அதிகாரமும் இல்லை.

அதிகாரிகளின் இந்த செயலானது அவர்களது அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டது எனத் தெரிவித்த நீதிமன்றம், மனுதாரரின் விண்ணப்பத்தை நிராகரித்து எடுக்கப்பட்ட தீர்மானத்தை இரத்துச் செய்தது.

அத்துடன், இயற்கை நீதியின் கோட்பாடுகளுக்கு இணங்க புதிய விசாரணையை நடத்துமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டது.

மேலும், ஒரு தகுதியுள்ள நீதிமன்றத்தின் விவாகரத்து தீர்ப்பு அல்லது அறிவித்தல் இல்லாத பட்சத்தில், மனுதாரரின் தந்தையின் இரண்டாவது திருமணத்தின் சட்டபூர்வத் தன்மை குறித்து நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ விசா ரணை நடத்தவேண்டாம் என வும் அதிகாரிகளுக்கு நீதிமன்றம் கடுமையான கட்டளை பிறப்பித்துள்ளது.(அ)

# சீரற்ற காலநிலை காரணமாக மட்டக்களப்பில் ஒருவர் மரணம்

கொழும்பு, மே. 14

நாட்டின் பல மாவட்டங்களிலும் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக மட்டக்களப்பு கோரளைப்பற்று தெற்கு பிரதேச செயலாளர் பிரிவில் ஒரு மரணம் பதிவாகியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்று முற்பகல் 10.00 மணிக்கு வெளியிடப்பட்ட அறிக்கையில் இத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4 மாவட்டங்களுக்கு உட்பட்ட 17 பிரதேச செயலாளர் பிரிவுகளில் வசிக்கும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

62 குடும்பங்களைச் சேர்ந்த 203 நபர்கள் இதுவரையில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுள் 17 பேர் தற்காலிகப் பாதுகாப்பு மையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுடன் நாவிதன்வெளி பிரதேச சபை அமர்வு

மட்டக்களப்பு, மே. 14

முள்ளிவாய்க்கால் மண்ணில் உயிர்நீத்த உறவுகளை நினைவு கூர்ந்து, நாவிதன்வெளி பிரதேச சபையில் நேற்று புதன்கிழமை உணர்வுப்பூர்வமான நினைவேந்தல் மௌன அஞ்சலியுடன் நிகழ்த்தப்பட்டது.

நாவிதன்வெளி பிரதேச சபையின் 11ஆவது மாதாந்த அமர்வு தவிசாளர் இந்திரன் ரூபசாந்தன் தலைமையில் காலை 9:30 மணியளவில் சபா மண்டபத்தில் நடைபெற்றது.

மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு, அங்கு உயிரிழந்த உறவுகளுக்காக ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து சபையின் நடவடிக்கைகள் ஆரம்பமாகின.

கூட்டத்தின் போது சபை உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்குப் பதிலளித்த தவிசாளர், பிரதேசத்தின் கல்வி மேம்பாடு குறித்துப் பின்வருமாறு குறிப்பிட்டார்.



“எமது பிரதேசத்தில் கல்வி வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கில், ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள சன சமூக நிலையங்கள் ஊடாக நூலகங்கள் புனர்நிர்மாணம் செய்யப்பட வேண்டும். அவை இடைநிறுத்தப்படாமல் தொடர்ந்து இயங்குவதை உறுதி செய்ய வேண்டும். இந்தத் திட்டத்திற்கு தன்னார்வலர்கள் சேவை மனப்பாங்குடன் முன்வந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## எதிர்க்கட்சியிலிருந்து...

தன்னை எதிர்க்கட்சி முகாமிலிருந்து வெளியேற்றச் சில குழுக்கள் முயற்சிப்பதாகச் சுட்டிக்காட்டிய அவர், அது ஒருபோதும் நடக்காது எனவும், எதிர்காலத்தில் தமது அரசியல் பயணமானது தற்போதைய முகாமுக்குத் தலைமைத்துவத்தை வழங்குவதை நோக்கியே அமையும் என்றும் உறுதிபடக் கூறியுள்ளார்.

தற்போதைய அரசாங்கம் தோல்வியடைந்துள்ளதாகவும், நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான தெளிவான பொருளாதாரப் பார்வை அரசிடம் இல்லை என்றும் அவர் கடுமையாக விமர்சித்துள்ளார்.

உலகிற்குத் திறந்த கதவுகளைக் கொண்டிராத மூடிய கொள்கைகள் மற்றும் குறுகிய சிந்தனைகள் மூலம் நாட்டை மீளக் கட்டியெழுப்ப முடியாது என்றும், அதன் விளைவுகள் எதிர்காலத்தில் மக்களுக்குத் தெளிவாகத் தெரியும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கத்துடன் இணைவது தொடர்பாக எவ்வித பேச்சுவார்த்தைகளும் நடத்தப்படவில்லை எனத் தெரிவித்த அவர், ஐக்கிய மக்கள் சக்திக்குள் பிளவுகளை ஏற்படுத்தவே இத்தகைய வதந்திகள் திட்டமிட்டுப் பரப்பப்படுவதாகக் குற்றம் சாட்டினார்.

பொருளாதார ரீதியாக வளமான இலங்கையை கட்டியெழுப்ப அரசாங்கத்துக்கு எதிரான அரசியல் போராட்டத்தைத் தீவிரப்படுத்தப் போவதாகவும், அதேநேரம் அனைத்தையும் எதிர்க்காமல் சிறந்த முடிவுகளுக்கு ஆதரவளிக்கும் புதிய அரசியல் கலாசாரத்தை முன்னெடுக்கப் போவதாகவும் ஹர்ஷ டி சில்வா மேலும் குறிப்பிட்டுள்ளார். இலங்கைக்கு ஒரு புதிய யுகம் தேவை எனத் தெரிவித் துள்ள அவர், நாட்டுக்காகப் பாரிய பொறுப்புகளை ஏற்கத் தாம் எப்போதும் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (அ)

## எரிபொருள்...

நாட்டின் தற்போதைய பொருளாதாரச் சவால்கள் மற்றும் எரிபொருள் விலை அதிகரிப்புக்கான காரணங்கள் குறித்து விளக்கமளித்தார்.

அதிக விலைக்கு எரிபொருளை இறக்குமதி செய்து, பழைய முறையிலேயே அதன் பயன்பாடு தொடருமானால் நாட்டிலிருந்து டொலர்கள் வெளியேறுவது மேலும் அதிகரிக்கும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

எரிபொருள் இறக்குமதிக்காகச் செலவிடப்படும் தொகை மாதந்தோறும் பல மடங்கு அதிகரித்து வருவதை ஜனாதிபதி புள்ளிவிவரங்களுடன் விளக்கினார்:

பெப்ரவரி மாதம் 98 மில்லியன் டொலராக இருந்த செலவு, மே மாதத்தில் 522 மில்லியன் டொலராக (சுமார் 6 மடங்கு) அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

உலகச் சந்தை நிலவரப்படி ஒரு லீற்றர் டீசலின் விலை 720 ரூபாயாக உள்ளது. இருப்பினும், அரசாங்கம் 100 ரூபாய் சுமையை ஏற்றுக்கொண்டு, மக்களுக்கு 392 ரூபாய்க்கு வழங்கி வருகிறது.

அரசாங்கத்தின் மானியத்தையும் சேர்த்து கூட்டுத்தாபனத்திற்கு 492 ரூபாயே கிடைக்கிறது.

இது பாரிய நட்டத்தை உருவாக்குவதோடு, இதனை நீண்ட காலத்திற்குத் தொடர முடியாது என ஜனாதிபதி வலியுறுத்தினார்.

மின்சாரக் கட்டண அதிகரிப்பினால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளைக் குறைக்கும் வகையில் 95 வீதமான மக்களுக்குப் பாதிப்பில்லாத வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். எவ்வாறாயினும், திறைசேரியிலிருந்து தொடர்ச்சியாகப் பணம் வழங்கி எரிபொருள் கூட்டுத்தாபனம் மற்றும் மின்சார சபையைப் பராமரிக்க முடியாது என்றும், அந்த நிறுவனங்களை வினைத்திறன் மிக்கதாக மாற்ற வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த கால அரசாங்கங்களின் முறையற்ற நிர்வாகத்தால் ஏற்பட்ட 84 பில்லியன் ரூபாய் நட்டத்தை தற்போதைய அரசாங்கமே ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், பொருளாதாரத்தைச் சவால்களுக்கு மத்தியில் நிர்வகிக்க வேண்டியுள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மேலும் தெரிவித்தார். (அ)

## சட்டத்திற்கு மேல்...

நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கஸ்பேவவில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சமநீதி என்ற கொள்கை நிலைநாட்டப்பட வேண்டுமாயின், நிதி மற்றும் நிர்வாக ரீதியிலான பாரிய முறைகேடுகள் குறித்து உரிய சட்ட ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும் என நாமல் ராஜபக்ஷ வலியுறுத்தினார்.

நிலக்கரி இறக்குமதியின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள்,அரசாங்கத்தின் நிதி கொடுக்கல் வாங்கல்களில் நிலவும் மர்மங்கள், சந்தேகநபர்களை வற்புறுத்தி வாக்குமூலங்களைப் பெறும் நடவடிக்கைகள் மற்றும் அதன் பாரதூரமான விளைவுகள் குறித்து அவர் தனது கவலையை வெளியிட்டார்.

தற்போதைய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகள் பொதுமக்களையும் சிறு வணிகர்களையும் கடுமையாகப் பாதித்துள்ளதாக இதன்போது அவர் சாடினார்.

சர்வதேச தரத்துடன் ஒப்பிடுகையில், இலங்கை மிக அதிக விலைக்கு எரிபொருளைக் கொள்வனவு செய்வதாக அவர் குற்றம் சாட்டினார்.

மின்சாரக் கட்டண உயர்வு மற்றும் வரி விதிப்பு முறைகள் சாதாரண குடும்பங்கள் மற்றும் சிறு வணிகங்கள் மீது தாங்க முடியாத சுமையை ஏற்படுத்தியுள்ளன.

அரசாங்கம் தனது தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிவிட்டதுடன், அரச நிறுவனங்களுக்குள் பொறுப்புக்கூறல் மற்றும் சிறந்த நிர்வாகம் சீர்குலைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனநாயக ரீதியிலான சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும், அரசியல் ரீதியிலான அச்சுறுத்தல்கள் மற்றும் பழிவாங்கல்கள் தவிர்க்கப்பட்டு, சட்ட அமுலாக்கலில் நியாயத்தன்மை உறுதி செய்யப்பட வேண்டும் எனவும் நாமல் தனது உரையில் மேலும் வலியுறுத்தினார். (அ)

## சட்டத்தின் ஆட்சி...

நேற்று பத்தரமுல்ல நெலும் மாவத்தையிலுள்ள பொதுஜன பெரமுனவின் கட்சித் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நேற்று முன் தினம் மாத்தளையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் "சட்டத்திற்கு மேல் எவரும் இருக்க முடியாது" என ஜனாதிபதி குறிப்பிட்ட கருத்தை கடுமையாக விமர்சித்த சஞ்சீவ எதிரிமான்ன, தற்போதைய அரசாங்கத்தில் பாரிய குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்கள் எவ்வித விசாரணைகளும் இன்றி சுதந்திரமாக இருப்பதாகக் குறிப்பிட்டார்.

குறிப்பாக, அரசாங்கத்தின் அரசியல் பலம் கொண்டவர்கள் தொடர்புபட்டதாகக் கூறப்படும் கொள்கலன் மோசடி, வெலிகம பிரதேச சபை உறுப்பினர்கள் மாயமான விவகாரம் மற்றும் ஒரு லட்சம் பேரைக் கொன்றாவது அதிகாரத்தைத் தக்கவைப்பேன் எனத் தொலைபேசியில் மிரட்டல் விடுத்ததாகக் கூறப்படும் கடுவெல மேயர் ரஞ்சன் ஜயலால் போன்றோர் மீது இதுவரை எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

அதேபோல், யக்கலவில் உள்ள முன்னிலை சோசலிசக் கட்சி அலுவலகத்திற்குள் புகுந்து தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க, உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தடுக்கத் தவறியதாகக் குற்றம் சுமத்தப்பட்ட ரவி செனவிரத்ன மற்றும் ஷானி அபேசேகர ஆகியோரும் இன்று சட்டத்திற்கு அப்பால் பாதுகாக்கப்படுவதாக அவர் குற்றம் சுமத்தினார்.

இரட்டைக் குடியுரிமையுடன் பாராளுமன்றம் வந்ததாகக் கூறப்படும் ஹர்ஷண சூரியப்பெரும மீதான விசாரணைகள் முடக்கப்பட்டுள்ளதாகவும், நிலக்கரி மோசடி மற்றும் டொலர்கள் மாயமானமை போன்ற பாரிய ஊழல்கள் தொடர்பில் அடிப்படை வாக்குமூலங்கள் கூடப் பெறப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (அ)

## அ.தி.மு.கவில் பெரும்...

எடப்பாடி பழனிசாமி அணி மற்றும் எஸ்.பி.வேலுமணி - சி.வி.சண்முகம் அணி என இருவேறு துருவங்களாகக் கட்சி பிளவுபட்டது.

முன்னாள் அமைச்சர்கள் பலர் இத்தேர்தலில் தோல்வியடைந்தமைக்கு எடப்பாடி பழனிசாமியின் தவறான தலைமைத்துவமே காரணம் என சி.வி.சண்முகம் தரப்பு பகிரங்கமாகக் குற்றம் சாட்டியிருந்தது.

அத்துடன், கட்சியிலிருந்து நீக்கப்பட்ட அனைவரையும் மீண்டும் ஒன்றிணைக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் அவர்கள் முன்வைத்தனர்.

இந்த முறுகல் நிலை உச்சமடைந்த நிலையில், எடப்பாடி பழனிசாமியின் கடும் எதிர்ப்பையும் மீறி, தமிழக சட்டமன்றத்தில் தமிழக வெற்றிக் கழகத்திற்கு ஆதரவாகச் சில அண்ணா திராவிட முன்னேற்ற கழக சட்டமன்ற உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

இதனையடுத்து, கட்சிக்கு அவப்பெயர் ஏற்படுத்தியதாகவும், கட்டுப்பாட்டை மீறிச் செயற்பட்டதாகவும் தெரிவித்து, அதிருப்தி அணியைச் சேர்ந்த முக்கிய நிர்வாகிகளைக் கட்சியிலிருந்து நீக்குவதாக எடப்பாடி பழனிசாமி நேற்று அறிவித்துள்ளார்.

தேர்தல் தோல்விக்குப் பின் அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தில் ஏற்பட்டுள்ள இந்த அதிரடி மாற்றங்கள் தமிழக அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

## இரு நாட்டு...

இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழகத்தில் நடைபெற்ற திராவிட ஆட்சிகளை வீழ்த்தி தமிழக வெற்றிக் கழகத்தின் சி.ஜோசப் விஜய் முதலமைச்சராக ஆட்சி பீடம் ஏறியுள்ளார். அவருக்கு எமது மக்கள் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

இலங்கையில் 30 ஆண்டுகளாக இடம்பெற்ற போரினால் அழிக்கப்பட்டு, பல பிரச்னைகள் மத்தியில் சவால்களுடன் வாழ்ந்து வருகின்றோம். இவ்வாறான சூழ்நிலையில் எமக்கான வாழ்வாதாரமாக இருப்பது பாக்கு விரிகுடா- வளைகுடா இடையேயான கடற்பரப்பே காணப்படுகிறது.

இது இவ்வாறு இருக்கையில் அந்த கடற்பரப்பில் தொடர்ச்சியாக சட்டவிரோத தொழில்களில் தமிழக மீனவர்கள் ஈடுபடுகிறார்கள். அந்த சட்டவிரோத தொழிலை தடுப்பதற்காக நான்கு தடவை இந்திய மீனவர்களுடன் பேசியிருக்கின்றோம். நான்கு பேச்சுவார்த்தைகளுக்கு பின்னரும் அந்த பிரச்சினை தீர்க்கப்படவில்லை.

இந்த பிரச்சினை குறித்து கடந்த காலத்தில் தமிழக அரசிடம் முறையிட்டபோது அதற்கு முன்னைநாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கையில் எடுக்கும் ஆயுதம் பேனா. பேனாவை எடுத்து உடனடியாக வெளிவிவகார அமைச்சருக்கோ அல்லது மத்திய அரசுக்கோ கடிதம் எழுதுவார். இதனை நம்பி தமிழக மீனவர்களும் ஏமாற்றுவார்கள்.

அதேபோல் இன்று வந்துள்ள முதலமைச்சர் சி.ஜோசப் விஜய்யும் அதேபோலவே கையில் பேனாவை எடுத்து கடிதத்தை எழுதி ஆரம்பித்துள்ளார். அந்தவகையில் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அந்த கடிதத்தில், இலங்கையில் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறும், அவர்களது படகுகளை மீட்குமாறும் கடிதம் எழுதியுள்ளார். இந்த விடயமானது எமக்கு வேதனையை தருகிறது.

தமிழக மீனவர்கள் கைதுக்கு நாங்கள் காரணமில்லை. 2016ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் தொடக்கம் 8 மாதங்கள் காத்திருந்தோம். அதுவரை எந்தவிதமான முன்னேற்றமும் இல்லாத காரணத்தால் ஒன்பதாவது மாதம் வழக்கு தாக்கல் செய்தோம். அதாவது வெளிநாட்டு மீன்பிடி படகுகள் ஒழுங்குப் பிரமாணம் தொடர்பான சட்டத்தை நடைமுறைப்படுத் துமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தோம்.

தமிழக மீனவர்களின் அசமந்தப் போக்கும், எங்களை தொடர்ச்சியாக ஏமாற்றி வந்ததுவுமே வழக்கு தாக்கல் செய்தமைக்கான காரணமாக அமைந்தது. அந்தவகையில் நீதிமன்றம் 2018ஆம் ஆண்டு பிறப்பித்த கட்டளையின்படி எல்லைதாண்டி வரும் படகுகளுடன் மீனவர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு தண்டனை வழங்கப்படுகிறது.

பழைய அரசுகளின் விடயங்களை எல்லாவற்றையும் கைவிட்டுவிட்டு இப்போது வந்திருக்கின்ற தமிழக முதலமைச்சர் விஜய் இந்த பிரச்னை குறித்து அலசி ஆராய்ந்து, சாதகமான பாதகமான விடயங்களை அறிந்து இதற்கு நல்லதொரு தீர்வினை வழங்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

அவரிடம் அன்பாக கேட்க எமக்கு உரிமை இருக்கிறது. அவர் இந்தியாவில் பிறந்தாலும் அவரது புகுந்த வீடு இலங்கை - யாழ்ப்பாணமே. அந்தவகையில் அவர் புகுந்த வீட்டுக்கும் பெருமையை தேடித் தர வேண்டும். அவர் நல்லதொரு தீர்வினை தருவார் என்ற நம்பிக்கை இருக்கிறது - என்றார். (அ)

## பாதுகாப்பு...

சந்திப்பில் உரையாற்றியபோது ஆளுநர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

இரு நிறுவனங்களும் தற்போதுள்ள நடைமுறைகளை மீளாய்வு செய்து வருவதாகவும், எதிர்காலத்தில் இது போன்ற சம்பவங்களைத் தடுப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்த தங்கள் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி வருவதாகவும் இதன்போது மத்திய வங்கி ஆளுநர் குறிப்பிட்டார்.

மேலும் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த ஆளுநர், கணக்குதாரர்களால் வழங்கப்படும் பணம் செலுத்தும் வழிமுறைகளை மாற்றுவதற்கோ அல்லது சரிபார்ப்பதற்கோ மத்திய வங்கிக்கு நேரடிப் பொறுப்பு இல்லை என்று கூறினார்.

ஒரு பணம் செலுத்தும் வழிமுறை வழங்கப்படும்போது, கணக்கு விவரங்கள் மற்றும் பணம் செலுத்தும் முறைகள் சரியாகச் சரிபார்க்கப்பட்ட பிறகு, அந்தப் பரிவர்த்தனையைச் செயல்படுத்துவதோடு மத்திய வங்கியின் பொறுப்பு நின்றுவிடுகிறது என்று அவர் விளக்கினார். (அ)

## 16 புதிய இதய...

கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை உள்ளிட்ட முக்கிய நகரங்களின் தேசிய மற்றும் போதனா மருத்துவமனைகளில் இந்த ஆய்வகங்கள் நிறுவப்படும்.

ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகமை ஆகியவற்றின் நிதிப் பங்களிப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இந்த ஆய்வகங்கள் மூலம் இதயத் தமனிகளில் உள்ள அடைப்புகளைக் கண்டறியும் இதய இரத்த நாளப் பரிசோதனை, இதய அடைப்பு நீக்கி பொருத்துதல் மற்றும் இதயத் துடிப்பு சீராக்கிகளை பொருத்துதல் போன்ற நவீன சிகிச்சைகளை மேற்கொள்ள முடியும்.

தற்போதுள்ள 10 ஆய்வகங்களுடன், இந்தப் புதிய 16 பிரிவுகளும் இணைக்கப்படும் போது, அரச துறையிலுள்ள இதயச் சிகிச்சை ஆய்வகங்களின் மொத்த எண்ணிக்கை 26 ஆக உயரும். இந்த விரிவாக்கத்தின் மூலம் மாரடைப்பு நோயாளிகளுக்கு 24 மணி நேரமும் அவசர சிகிச்சையை உறுதிப்படுத்த முடியும். அத்துடன், மாகாண மட்டத்திலான இதயச் சிகிச்சைத் திறனை இரண்டு மடங்காக அதிகரிக்கவும், சத்திரசிகிச்சைக்காகக் காத்திருக்கும் நோயாளிகளின் பட்டியலைக் குறைக்கவும் முடியும் எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

## இன்று முதல்...

மாகாணங்களின் சில பகுதிகளுக்கு மிதமானது முதல் சற்று கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளமை குறிப்பிடத்தக்கது. அதேவேளை நாளை இரவு வரை இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் அதுவரை கடலுக்கு செல்வதைத் தவிர்க்க வேண்டும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# பாதிக்கப்பட்டுள்ள மக்களை நாங்களே நாடிச் சென்று சேவை செய்யவேண்டும்!

## வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு



முல்லைத்தீவு, மே. 14

பாதிக்கப்பட்ட மக்கள் தங்களின் தேவைகளுக்காக எங்களை நாடி வரத் தேவையில்லை. நாமே அவர்களை நாடிச் சென்று சேவை யாற்றவேண்டும். அப்படி அவர்கள் தங்களது தேவைகளுக்காக அரச அலுவலகங்களுக்கு வந்தாலும், ஒரு தடவை மட்டுமே வர வேண்டும். அவர்கள் மீண்டும் மீண்டும் அலைக்கழிக்கப்படாத வாறு அவர்களின் தேவைகளை நாம் முழுமையாக நிறைவேற்றிக் கொடுக்கவேண்டும், என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் அமைக்கப்பட்டுள்ள சமூகப் பராமரிப்பு நிலையத்தை நேற்று புதன்கிழமை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்து உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்தத் திறப்பு விழா நிகழ்வில் இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவர் மத்தியூ டக்வொர்த் விசேட அதிதியாகக் கலந்துகொண்டார். வருகை தந்த அதிதிகள் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் அழைத்துச் செல்லப்பட்டு, புதிய நிலையம் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

சிறுவர்கள், பெண்கள், முதியோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் விசேட தேவையுடையோர் எனப் பல்வேறு தரப்பினரும் தமக்கான சேவைகளைப் பெறப் பல அரச அலுவலகங்களுக்கும், பல மேசைகளுக்கும் ஏறி இறங்க வேண்டியிருந்த சவாலான நிலைமையை மாற்றியமைக்கும் வகையிலேயே இந்த புதிய சமூகப் பராமரிப்பு நிலையம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய ஆளுநர் அவர்கள், "இந்த நிலையம் வெறுமனே ஒரு கட்ட டம் மட்டுமல்ல, எமது சமூகத்தில் உள்ள ஒவ்வொரு தனிநபரும் ஆதரவு, வழிகாட்டுதல் மற்றும் நிறைவான வாழ்க்கையை வாழ்வதற்கான வாய்ப்புகளைப் பெறுவார்கள் என்பதற்கான ஒரு வாக்குறுதியாகும். பொதுமக்களின் தேவைகளை எங்களால் நேரடியாகப் பூர்த்தி செய்ய முடியாவிட்டால், அவர்களை உரிய திணைக்களங்க ளுக்குச் சரியான முறையில் வழிப்படுத்திவிட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்காக அவர்களின் பக்கம் நின்று எங்கள் சேவைகளைச் செய்து, அவர்களின் வாழ்வில் ஒரு ஒளிக் கீற்றை ஏற்படுத்த வேண்டும். இந்த நிலையம் கருணையும் செயலும் ஒன்றிணையும் இடமாகவும், எமது மீளெழுச்சியை வலுப்படுத்தும் ஒரு மையமாகவும் அமையும்.

இந்த முன்னெடுப்பை நனவாக்குவதற்குத் தாராளமாக ஆதரவளித்த அவுஸ்திரேலிய அரசாங்கத்துக்கும், ஆசியா அறக்கட்டளையின் (ஏசியா பவுண்டேசன்) தொலைநோக்குச் சிந்தனைக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவுஸ்திரேலியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் இங்கு வருகை தந்துள்ள உயர்ஸ்தானிகரை வடபகுதி மக்கள் சார்பாக அன்புடன் வரவேற்கின்றேன் - என்றார். (அ)

# பல்லின நல்லிணக்கத்தை வலுப்படுத்த முதிர்ச்சியடைந்த மதத் தலைமை தேவை!

## பிரதமர் ஹரிணி வலியுறுத்து

கொழும்பு, மே. 14

சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் உள்ளிட்ட அனைத்துச் சமூகங்களும் சகோதரத்துவத்துடன் வாழும் ஆனைமடுவ போன்ற பல்லினப் பண்பாட்டுப் பிரதேசங்களில், இனங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பையும் நல்லிணக்கத்தையும் மேலும் பலப்படுத்துவதற்கு முதிர்ச்சியடைந்த மதத் தலைமைத்துவம் அவசியமானது எனப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

ஆனைமடுவ தர்மகீர்த்தி சிறீ பஞ்ஞானந்த தலைமைத் தேரருக்கு ராஜவன்னி மற்றும் குமாரவன்னி ஆகிய இரு பிரதேசங்களுக்குமான பிரதம சங்கநாயக்கர் பதவியை வழங்குவதை முன்னிட்டு, நேற்று ஆனைமடுவ சுதம்பாயவில் நடைபெற்ற 'சன்னஸ் பத்திரம்' கையளிக்கும் நிகழ்வில் உரையாற்றும் போது பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

மல்வது விஹாரை பீடத்தின் அநுநாயக்கர் நியாங்கொட விஜிதசிறி தலைமைத் தேரரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவினால் குறித்த 'சன்னஸ் பத்திரம்' ஆனைமடுவ தர்மகீர்த்தி பஞ்ஞானந்த தலைமைத் தேரரிடம் கையளிக்கப்பட்டது. 'விஜினிபத' எனும் விசிறியை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வழங்கினார்.

இந்நிகழ்வில், அரச அதிகாரிகளுடன், பெருமளவு பக்தர்களும் கலந்துகொண்டனர். (அ)

# சப்ரகமுவ பல்கலைக்கழக துணைவேந்தர் பதவி நீக்கம்

கொழும்பு, மே. 14

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவியிலிருந்து பேராசிரியர் சுனில் சாந்த உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் நீக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவித்தல் பல்கலைக்கழக அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. புதிய துணைவேந்தர் ஒருவரை நியமிப்பதற்கான நடவ டிக்கைகள் அல்லது பதில் கடமைகளை மேற்கொள்வது தொடர்பான அறிவிப்புகள் விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# யாழில் இருந்து வவுனியா சென்ற யுவதி ஒருவரைக் காணவில்லை!

யாழ்ப்பாணம், மே. 14

யாழில் இருந்து வவுனியா சென்ற வவுனியாவைச் சேர்ந்த யுவதி ஒருவரை காணவில்லை எனப் பெற்றோர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறித்த யுவதி கடந்த 27ஆம் திகதி யாழ்ப்ணத்தில் இருந்து வவுனியா செல்வதாக சென்ற நிலையிலேயே காணாமல் போயுள்ளார் என காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தகவல் தெரிந்தோர் 0773828845 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வவுனியா கற்பகபுரம் பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய சுவந்தன் திவ்யா என்ற யுவதியே இவ்வாறு காணாமல் போனவர் ஆவார்.

இது தொடர்பில் காங்கேசன்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)


# தென்மராட்சியை சென்றடைந்த முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்தி!

யாழ்ப்பாணம், மே. 14

முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்தி சாவகச்சேரி நகரை நேற்று முற்பகல் 10.30 மணியளவில் அடைந்தது.

யாழ்.நல்லூரில் உள்ள தியாக தீபம் திலீபனின் நினைவாலய முன்றலிலிருந்து முள்ளிவாய்க்கால் நோக்கிய தனது பயணத்தை நினைவு ஊர்தி நேற்று முன்தினம் காலை ஆரம்பித்தது.

நல்லூரிலிருந்து புறப்பட்ட முள்ளிவாய்க்கால் ஊர்தி நேற்று முன் தினம் யாழ்.நகரப் பகுதிகளில் வலம் வந்தது.



அதனைத் தொடர்ந்து நேற்று ஏ-9 வீதியூடாக தொன்மராட்சி பிரதேசத்தின் நாவற்குழி, கைதடி, சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் ஆகிய இடங்களை வலம் வந்தது.

நேற்று பிற்பகலில் வடமராட்சி நோக்கி பயணிக்கும் ஊர்தி, வடக்கு - கிழக்கிலுள்ள 8 மாவட்டங்களையும் சென்றடைந்து, மே 18 திகதி காலை முள்ளிவாய்க்கால் வந்தடையவுள்ளது. (அ)

# அல்லைப்பிட்டி படுகொலை நினைவு நாள் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், மே. 14


முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் இரண்டாவது நாளான நேற்று அல்லைப்பிட்டி படுகொலை நினைவு நாளும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வும் தீவகம் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது முள்ளிவாய்க்கால் மண்ணில் உயிர் நீத்தவர்க ளின் நினைவாக அல்லைப்பிட்டி பங்குத் தந்தையால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

அத்தோடு அல்லைப்பிட்டி சேமக்காலையில் காணப்படும் அல்லைப்பிட்டி படுகொலையின் போது படுகொலை செய்யப்பட்டவர்களின் கல்லறைகளில் நினைவுச் சுடர்கள் ஏற்றப்பட்டு மலர் தூவி அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

காய்ச்சிய கஞ்சியை சிரட்டையில் குடித்து முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தில் இடம் பெற்ற அவலத்தினை தமக்குள் பகிர்ந்து கொண்டனர்.

அஞ்சலி நிகழ்வில் அல்லைப்பிட்டி படுகொலையின்போது உயிரிழந்தவர்களின் உறவுகள், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குழுவினர், அல்லைப்பிட்டி பங்குத்தந்தை அருட்தந்தை றெக்னோ மற்றும் பொதுமக்கள் சிலரும் கலந்து கொண்டனர். (அ)



இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.05.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media